# ශ්‍රී ලංකා පොලිස් දෙපාර්තමේන්තුව
# இலங்கை பொலிஸ் திணைக்களம்
# Sri Lanka Police Department


## කාර්ය සාධන වාර්තාව
## செயலாற்றுகை அறிக்கை
## Performance Report

## 2015

# செயலாற்றுகை அறிக்கை

## *2015*

## இலங்கை பொலிஸ் திணைக்களம்



**நோக்கு**

குற்றச்செயல் மற்றும்
வன்முறை தொடர்பான
பயம் இன்றி நம்பிக்கையுடன்
வாழ்வதற்குரியஅமைதியான
சூழலொன்றை உருவாக்குதல்

**அரும்பணி**

சகலருக்கும் சமமாக
எவருக்கும் பாதிப்பை
ஏற்படுத்தாமல்
குற்றச் செயல்களையும்
பயங்கரவாதத்தையும்
தடுப்பதற்கும், சமாதானத்தை
பாதுகாத்துக் கொள்வதற்கும்,
நாட்டில் சட்டத்தை பேணுவதற்கும்,
அதை நடைமுறைப்படுத்துவதற்கும்
இலங்கை பொலிஸ்
நம்பிக்கையுடன் செயலாற்றுவதற்கு
தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.



**பொலிஸ்மா அதிபரின் செய்தி**

பொலிஸ் திணைக்களத்தின் பிரதான நோக்கமானது நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கினை பாதுகாப்பதன் மூலம் குற்ற அச்சமின்றி அனைவருக்கும் சமாதானமான சூழலை உருவாக்குவதாகும். விமர்சங்களுக்கு மத்தியிலும் இந்த குறிக்கோளை அடைய இலங்கை பொலிஸ் முழுமையாக கடமைப்பட்டுள்ளது.

புதிய தொழில்நுட்பத்தின் மேம்பாட்டோடு குற்றங்கள் பாரிய வளர்ச்சி பெற்றுள்ளன. இத்தகைய குற்றங்களை தடுப்பதற்கு குற்ற விசாரணையை நாம் உயர் மட்டத்தில் மேற்கொள்ள வேண்டும்., கைரேகையை ஆய்வு செய்ய புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல், சிசிடிவி முறைமையை பல்வேறு இடங்களிலும் பயன்படுத்துதல்.உத்தியோகத்தர்களுக்கு கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பொதுமக்களுடனான தொடர்புகளை மேம்படுத்துதல் போன்ற வழிமுறைகளை பயன்படுத்தி குற்றங்களை தடுத்ததன் மூலம் 2015 இல் பொலிஸ் திணைக்களம் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளது. 2015 இல் பதிவாகிய பாரிய குற்றங்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது குறைவடைந்துள்ளமை இதன் விளைவான நேரடியான தாக்கமாகும்.

சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை தீர்க்கும் செயற்பாடு நிபுணத்துவம் கொண்ட பொலிஸ் திணைக்களத்தின் மற்றுமொரு தெளிவான அடையாளமாகும்.பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளமை பதிவானதோடு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போக்கு உயர்ந்த அளவில் காணப்படுகிறது. முன்னைய வருடத்தை போன்றே பல்வேறுபட்ட முறைப்பாடுகளுக்கு தீர்வு காணும் மட்டம் உயர்வாக காணப்பட்டது.

சமூகத்தின் உடல்,உள சுகாதாரத்தை நிறைவு செய்யும் எம்முடைய அர்ப்பணிப்பை சட்டவிரோத போதைபொருள் மற்றும் மதுபான சோதனைகள் தெளிவாக காட்டின சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் மதுபானம் தொடர்பிலான கைதுகள் 2015 இல் அதிகரித்துள்ளன. தந்திரோபாயமான தேடுதல்கள் இந்த அபிவிருத்திக்கு காரணங்களாகும்

பொலிசாரின் சேவைமூலம் அனைவரையும் திருப்திப்படுத்த முடியாவிடினும் அனைவருக்கும் ஒரே சேவையை வழங்க நாம் கடப்பாடு கொண்டுள்ளோம். ஒவ்வொரு சேவைக்கும் தட்டுப்பாடும் பலவீனமும் பொதுவானவை . ஆயினும் முன்னைய வருடத்தில் 59% மாக காணப்பட்ட பொலிசாரினது பொதுமக்களுடனான தொடர்புகள் தொடர்பிலான பொதுமக்களது பின்னூட்டல் முடிவுகள் 2015 இல் 79% மாக அதிகரித்துள்ளது. சில பிரதேசங்களில் குற்றம் இடம்பெறும் வாய்ப்பு 30% இல் இருந்து 5% மாக குறைவடைந்துள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பே இதற்கு காரணமாகும்.

குறைகள்,விமர்சனங்கள் பாராட்டுக்கள் என்பன பொதுமக்கள் சேவையுடன் இணைந்தவை ஆயினும் எமது இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்ள பொதுமக்களது உதவி மிக முக்கியமானதாகும்.இது தொடர்பில் பொதுமக்களது மேலதிக உதவி முக்கியமானது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

2015 இல் நாம் எதிர்கொண்ட வெற்றிகளையும் தோல்விகளையும் உந்துசக்தியாக கொண்டு அமைதியான சட்டத்தை மதிக்கும் சமூகத்தை உருவாக்க நாம் உறுதிபூணுவோம்.

**என்.கே.இலங்ககோன்**
**பொலிஸ் மா அதிபர்**

## பொலிஸ் திணைக்களத்தின் பணிகள்

- ❖ பொதுமக்களது சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுதல்..
- ❖ வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதலும் போக்குவரத்தை கட்டுப்படுத்தலும்.
- ❖ பிரபுக்கள் பாதுகாப்பு.
- ❖ சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பணிகளுக்கும் அனர்த்தங்களின் போதான குறித்த பிரிவுகளுக்கும் உதவுதல்.
- ❖ ஊழல் மற்றும் கலவரங்களை தடுத்தலும் பல்வேறுபட்ட முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்குதலும்.
- ❖ தொடர்புபட்ட பிரிவுகளுக்கும் பொதுமக்களுக்கும் பொலிஸ் இசைவு சான்றிதழ் மற்றும் பின்னணி அறிக்கைகள் வழங்குதல்.

## விசேட அதிரடிப்படையினரின் பணிகள்

- ❖ குற்றங்களை தடுக்க திடீர் சோதனைகளை நடாத்துதல்.
- ❖ உள்நாட்டு வெளிநாட்டு பிரபுக்களுக்கான பாதுகாப்பு பணிகள்.
- ❖ தேடுதல்களையும் வெடிகுண்டு அகற்றும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தல்.
- ❖ பொதுமக்களது சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுவதற்கு பொலிஸ் திணைக்களத்துக்கு உதவுதல்.
- ❖ இயற்கை அல்லது மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அவசர நிலைமைகளின் போது ஒழுங்கினை வழமைக்கு கொண்டுவர பொதுமக்களுக்கு உதவுதல்.
- ❖ சமூக விரோத செயற்பாடுகளையும் தவறான செயற்பாடுகளையும் ( போதைப்பொருள்/கஞ்சா, மோசடி ) தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ❖ இயற்கை பாரம்பரியத்தை பாதுகாக்கவும் பொதுமக்களால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை தடுக்கவும் நடவடிக்கை எடுத்தல்.
- ❖ மீட்பு பணிகளை முன்னெடுத்தல்.


## உள்ளடக்கம்

**துறை** **பக்கம்**


| | | |
|---|---|---|
| *01.* | பதவி படிநிலையும் படையினர் எண்ணிக்கையும் | *01 - 04* |
| *02.* | பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாக கட்டமைப்பு | *05 -09* |
| *03.* | குற்றத்தடுப்பும் விசாரணையும் | *10-10* |
| *04.* | சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | *11- 11* |
| *05.* | பல்வேறு முறைப்பாடுகளின் விசாரணை | *12 - 12* |
| *06.* | மது மற்றும் போதை ஒழிப்பு | *13- 15* |
| *07.* | சட்டக்குற்றங்கள் மற்றும் ஊழல் ஒழிப்பு | *16 - 17* |
| *08.* | வாகன முகாமைத்துவமும் வீதிப் பாதுகாப்பும் | *18 - 18* |
| *09.* | ஏனைய பொதுமக்கள் சேவைகள் | *19 - 21* |
| *10.* | மனிதவள மேம்பாடு | *22 - 26* |
| *11.* | பௌதீகவள மேம்பாடு | *27 – 29* |
| *12.* | மொத்த நிதியியல் செயலாற்றுகை | *30 - 30* |
| *13.* | *2015* ம் ஆண்டு செயற்திறன் சுருக்கமாக | *31- 31* |

## *01.* பதவி படிநிலையும் படையினர் எண்ணிக்கையும்

### *1.1.* பதவிப் படிநிலை



## *1.2 எண்ணிக்கை (சாதாரண பொலிஸ்)*

*அட்டவணை இல 01*

*2015 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளபடியான எண்ணிக்கை (சாதாரண பொலிஸ்)*

| **தரம்** | **அங்கீகரிக்கப்பட்ட ஆளணி** | **சேவையில் உள்ள ஆளணி** | **வெறிதாக்கப்பட்ட ஆளணி** | **இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** | **சேவையில் உள்ள உண்மையான ஆளணி** | **வெற்றிடங்கள்** | **உதவி சேவைகள்** | **உண்மையான வெற்றிடங்கள்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொ.மா.அ | *1* | *1* | | | *1* | | | *0* |
| சி.பி.பொ.அ | *12* | *12* | | | *12* | *0* | | *0* |
| பி.பொ.அ | *46* | *24* | | *2* | *22* | *22* | | *22* |
| சி.பொ.அ | *169* | *79* | *1* | *2* | *76* | *90* | *3* | *87* |
| பெ.சி.பொ.அ | *1* | *0* | | | *0* | *1* | | *1* |
| பொ.அ | *162* | *24* | | *1* | *23* | *138* | | *138* |
| பொ.அ | *2* | *0* | | | *0* | *2* | | *2* |
| உ.பொ.அ | *314* | *303* | | *2* | *301* | *11* | *9* | *2* |
| பெ.உ.பொ.அ | *15* | *10* | | | *10* | *5* | | *5* |
| பி.பொ.ப | *780* | *721* | *5* | *12* | *704* | *59* | *15* | *44* |
| பெ.பி.பொ.ப | *15* | *15* | | | *15* | *0* | | *0* |
| பொ.ப | *2699* | *2178* | *15* | *38* | *2125* | *521* | | *521* |
| பெ.பொ.ப | *266* | *214* | *1* | *2* | *211* | *52* | | *52* |
| உ.பொ.ப | *5312* | *5001* | *21* | *58* | *4922* | *311* | *81* | *230* |
| பெ.உ.பொ.ப | *642* | *589* | *3* | | *586* | *53* | *2* | *51* |
| உ.பொ.ப | *125* | *119* | | | *119* | *6* | | *6* |
| ம.சா | *100* | *6* | *1* | | *5* | *94* | | *94* |
| ம.சா (சாரதி) | *50* | *1* | | | *1* | *49* | | *49* |
| பொ.சா | *15315* | *13454* | *106* | *113* | *13235* | *1861* | | *1861* |
| பெ.பொ.சா | *1800* | *1233* | *6* | *1* | *1226* | *567* | | *567* |
| பொ.கொ | *43324* | *41242* | *1976* | *521* | *38745* | *2082* | | *2082* |
| பெ.பொ.கொ | *8468* | *6106* | *293* | *4* | *5809* | *2362* | | *2362* |
| பொ.கொ.சா | *700* | *425* | *2* | *4* | *419* | *275* | | *275* |
| பொ.கொ.சா | *3500* | *3230* | *143* | *12* | *3075* | *270* | | *270* |
| மொத்தம் | *83818* | *74987* | *2573* | *772* | *71642* | *8831* | *110* | *8721* |

*மூலம்: ஆளணி மற்றும் ஆவணப் பிரிவு*

## *1.3 எண்ணிக்கை (விசேட அதிரடிப்படை)*

*அட்டவணை இல 02*

| 2015 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளபடியான எண்ணிக்கை (விசேட அதிரடிப்படை) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தரம்** | **அங்கீகரிக்கப்பட்ட ஆளணி** | **சேவையில் உள்ள ஆளணி** | **வெறிதாக்கப்பட்ட ஆளணி** | **இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** | **சேவையில் உள்ள உண்மையான ஆளணி** | **வெற்றிடங்கள்** | **உதவி சேவைகள்** | **உண்மையான வெற்றிடங்கள்** |
| | *1* | *1* | *0* | *0* | *1* | *0* | *0* | *0* |
| சி.பொ.அ | *8* | *4* | *0* | *0* | *4* | *4* | *0* | *4* |
| பொ.அ | *7* | *0* | *0* | *0* | *0* | *7* | *0* | *7* |
| உ.பொ.அ | *34* | *23* | *0* | *0* | *23* | *11* | *0* | *11* |
| பெ.உ.பொ.அ | *1* | *0* | *0* | *0* | *0* | *1* | *0* | *1* |
| பி.பொ.ப | *67* | *67* | *2* | *0* | *65* | *0* | *0* | *0* |
| பெ.பி.பொ.ப | *2* | *2* | *0* | *0* | *2* | *0* | *0* | *0* |
| பொ.ப | *270* | *213* | *9* | *2* | *202* | *57* | *6* | *51* |
| பெ.பொ.ப | *7* | *6* | *0* | *0* | *6* | *1* | *0* | *1* |
| உ.பொ.ப | *812* | *723* | *41* | *3* | *679* | *89* | *1* | *88* |
| பெ.உ.பொ.ப | *13* | *13* | *1* | *0* | *12* | *0* | *0* | *0* |
| உ.பொ.ப | *4* | *4* | *0* | *0* | *4* | *0* | *0* | *0* |
| ம.சா | *37* | *1* | *0* | *0* | *1* | *36* | *0* | *36* |
| ம.சா (சாரதி) | *8* | *0* | *0* | *0* | *0* | *8* | *0* | *8* |
| பொ.சா | *1625* | *1315* | *12* | *1* | *1302* | *310* | *0* | *310* |
| பெ.பொ.சா | *27* | *20* | *0* | *0* | *20* | *7* | *0* | *7* |
| பொ.கொ | *6999* | *6327* | *1196* | *57* | *5077* | *672* | *0* | *672* |
| பெ.பொ.கொ | *163* | *141* | *15* | *1* | *125* | *22* | *0* | *22* |
| பொ.சா.சா | *64* | *57* | *0* | *0* | *57* | *7* | *0* | *7* |
| பொ.கொ.சா | *577* | *584* | *107* | *4* | *473* | *-7* | *0* | *-7* |
| மொத்தம் | *10726* | *9501* | *1383* | *65* | *8053* | *1232* | *7* | *1225* |

*மூலம்: ஆளணி மற்றும் ஆவணப் பிரிவு*


### *1.4 எண்ணிக்கை (உதவிச் சேவைகள்)*

*அட்டவணை இல 03*


| 2015 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளபடியான எண்ணிக்கை (உதவிச் சேவைகள்) | | | |
|---|---|---|---|
| தரம் | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | சேவையில் உள்ள ஆளணி | வெற்றிடங்கள் |
| பி.பொ.அ | 2 | 0 | 2 |
| சி.பொ.அ | 45 | 0 | 38 |
| பொ.அ | | 1 | |
| உ.பொ.அ | | 6 | |
| பி.பொ.ப | 422 | 4 | 322 |
| பொ.ப | | 26 | |
| உ.பொ.ப | | 70 | |
| பெ.பி.பொ.ப | 102 | 0 | 55 |
| பெ.பொ.ப | | 17 | |
| பெ.உ.பொ.ப | | 30 | |
| பொ.சா | 6748 | 193 | 5750 |
| பொ.கொ | | 805 | |
| பெ.பொ.சா | 246 | 37 | 56 |
| பெ.பொ.கொ | | 753 | |
| மொத்தம் | 7565 | 1342 | 6223 |

மூலம்: ஆளணி மற்றும் ஆவணப் பிரிவு


# *02* பொலிஸ் நிர்வாகக் கட்டமைப்பு




## *2.1 பிராந்திய பொலிஸ் பிரிவு கட்டமைப்பு*




## *2.2.* பொலிஸ் செயற்பாட்டுப் பிரிவு




பி.பொ.மா.அ. பொ.த.நிலை
பொலிஸ் ஊடகப் பிரிவு
பொலிஸ் தலைமை நிலையம்
பொலிஸ் பொது தொடர்பு பிரிவு
புள்ளிவிபரப்பிரிவு
ஆய்வுத் திட்டமிடல் பிரிவு
விசாரணை மீள் விசாரணை பிரிவு
முகாமைத்துவ அபிவிருத்தி பிரிவு
பி.பொ.மா.அ நடப்பு பிரிவு
கட்டிடப் பிரிவு
விநியோகப் பிரிவு
சொத்து முகாமைத்துவ பிரிவு
மருத்துவ பிரிவு
பி.பொ.மா.அ (மே.மா.தெ )
பாராளுமன்ற பிரிவு
பி.பொ.மா.அ –கண்டி
கேனல் பிரிவு
பி.பொ.மா.அ – பிரதமர் பாதுகாப்பு பிரிவு
பி.பா.பி
பி.பொ.மா.அ களசெயலணிப்பிரிவு
சுற்றாடல் பிரிவு
கள செயலக தலைமையகம்
விளையாட்டுப் பிரிவு
பி.பொ.மா.அ விசேட பாதுகாப்பு பிரிவு
அமைச்சர் பாதுகாப்பு பிரிவு
நீதிமன்ற பாதுகாப்பு பிரிவு
தூதரக பாதுகாப்பு பிரிவு
பி.பொ.மா.அ நலனோம்ப
நலனோம்பல் பிரிவு
பி.பொ.மா.அ வாகனப் பிரிவு
வாகனத் தலைமையகம்
அதிவேகப் பாதைப் பிரிவு
பி.பொ.மா.அ கொழும்பு எல்லை
குதிரைப் படைப் பிரிவு
கொழும்பு குற்றப் பிரிவு
மோசடி புலனாய்வு பிரிவு
புலானாய்வு பிரிவு மே.மா
பொலிஸ் கடல் பிரிவு
நகர போக்குவரத்துப் பிரிவு
பி.பொ.மா.அ குற்றவியல் பிரிவு
குற்றவியல் பிரிவு
சிறுவர்,பெண்கள் பணியகம்
போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம்
குற்ற அறிக்கைப் பிரிவு
பொலிஸ் சுற்றுலா பிரிவு
பி.பொ.மா.அ பயங்கரவாத புலனாய்வு பிரிவு
அரச புலனாய்வு சேவை
பயங்கரவாத புலனாய்வு பிரிவு
பி.பொ.மா.அ. போக்குவரத்து தொடர்பாடல் பிரிவு
போக்குவரத்து பிரிவு
தொடர்பாடல் பிரிவு
பொலிஸ் மா அதிபர் கட்டளையிடும் பிரிவு

*2.3 விசேட அதிரடிப்படையினரின் கட்டமைப்பு*



## *03.* குற்றத்தடுப்பும் விசாரணையும்

### *3. 1* பாரிய குற்றங்கள்

*அட்டவணை இலக்கம் 4 க்கு அமைய **31.12.2015** இல் முடிவடைந்த வருடத்தில் பதியப்பட்ட பாரிய குற்றங்களின் எண்ணிக்கை **40188.** இவற்றில் **23,575** குற்றங்கள் தீர்வு காணப்பட்டவை. இதன் சதவீதம் **59%.** முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது தீர்வு காணப்பட்ட பாரிய குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை இது காட்டுகிறது இந்த வருடத்தில் பதியப்பட்ட பாரிய குற்றங்களை எம்மால் குறைக்க கூடியதாக இருந்தது. 2014 இல் 50962 ஆக இருந்த இந்த எண்ணிக்கை 2015 இல் 40188 ஆக குறைவடைந்துள்ளது. பாரிய குற்றங்களுக்கான தீர்வுகாணப்பட்ட விகிதம் அதிகரித்தமையும் பாரிய குற்றங்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையும் பொலிசாரினதும் சமூகத்தினதும் சிறந்த அடைவுகளாகும்.*

*அட்டவணை இல **04***

| **குற்றங்களின் வகைகள்** | **2013** | | **2014** | | **2015** | |
|---|---|---|---|---|---|---|
| | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை |
| பாரிய குற்றங்கள் | *55,349* | *32,791* | *50,962* | *29,396* | *40188* | *23575* |
| நபர்களுக்கு எதிரான சிறிய குற்றங்கள் | *45,282* | *33,094* | *42,368* | *30,561* | *43870* | *30292* |
| சொத்துகளுக்கு எதிரான சிறிய குற்றங்கள் | *26,138* | *15,703* | *21,827* | *11,691* | *30085* | *14407* |
| மொத்தம் | ***126,769*** | ***81,588*** | ***115,157*** | ***71,648*** | ***114143*** | ***68274*** |

மூலம்: புள்ளிவிபரவியல் பிரிவு



குற்றச்செயல் ஒன்றை ஆராய்தல்

### *3.2.* நபர்களுக்கும்,சொத்துகளுக்கு எதிரான சிறிய குற்றங்கள்

*மேல் உள்ள அட்டவணைக்கு அமைய இத்தகைய குற்றங்கள் 2014 உடன் ஒப்பிடும்போது 2015 இல் கூடிய அளவு பதிவாகியுள்ளன. தீர்வுகாணப்பட்ட சிறிய குற்றங்களின் சதவீதங்கள் 2015,2014 இல் முறையே **69%, 48%** ஆகும்.*

## *04. சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள்*

*சிறுவர்களுக்கும்,பெண்களுக்கும் சிறந்த சமூக சூழலை வழங்குதல் எந்தவொரு சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் அவசியமான காரணியாகும். சிறுவர்களும் பெண்களும் குற்றமற்ற சூழலில் பயமின்றி வாழும் உரிமையை உறுதிப்படுத்த இலங்கை பொலிஸ் சிறந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. 2015 இல் சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் எதிராக பதியப்பட்ட குற்றங்கள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

*அட்டவணை இல 05*

| குற்றத்தின் வகை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை |
|---|---|---|---|---|---|---|
| சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் | 6,040 | 2,109 | 5,868 | 1,648 | 5,911 | 5,102 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | 8,320 | 4,672 | 8,434 | 4,399 | 8288 | 4579 |
| மொத்தம் | 14,368 | 6,781 | 14,302 | 6,047 | 14199 | 4681 |

*மூலம்: புள்ளிவிபரவியல் பிரிவு*

*அட்டவணைக்கு ஏற்ப 2013 இல் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் படிப்படியாக குறைவடைந்துள்ளதுடன் 2015 இல் சிறிதளவு அதிகரிப்பு காணப்படுகிறது. இருப்பினும் தீர்வு காணப்பட்ட வீதம் 2014 உடன் ஒப்பிடும்போது 2015 இல் உயர்வாக 86% மாக காணப்படுகிறது. சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை தீர்ப்பதில் பாரிய முன்னேற்றம் பொலிசாரால் காட்டப்பட்டது. 2014 உடன் ஒப்பிடும்போது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைவடைந்துள்ளதொடு தீர்வு காணும் வீதம் 55% மாக காணப்பட்டது.*

## *05.* பல்வேறு முறைப்பாடுகளின் விசாரணை

*பல்வேறுபட்ட முறைப்பாடுகள் பொலிசாரை மட்டுமின்றி பொதுமக்களையும் பாதிக்கும் விடயமாகும். சிறிய குற்றமொன்றுக்கு ஆரம்பத்திலேயே தீர்வுகாணுதல் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய பாரிய குற்றமொன்றை தடுக்கும்.. இதனை கருத்தில் கொண்டு சிறிய குற்றங்களை ஆராய்வதற்கு பொலிஸ் திணைக்களத்தினால் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.*
*அட்டவணைக்கு அமைய 2015 இல் பதியப்பட்ட 1014812 பல்வேறுபட்ட முறைப்பாடுகளில் 1014291 முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது பல்வேறுபட்ட குற்றங்களில் துரித வீழ்ச்சி காணப்படுகிறது. இதன் மூலம் அத்தகைய முறைப்பாடுகளுக்கு தீர்வினை வழங்கும் பொலிசாரின் திறன் எடுத்துக்காட்டப்படுகிறது.*

*அட்டவணை இல 06*

| | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை |
| **பல்வேறு முறைப்பாடுகள்** | 1,046,024 | 1,044,465 | 1,065,648 | 1,063,413 | 1,014,812 | 1,014,291 |

*மூலம்: புள்ளிவிபரவியல் பிரிவு*

## *06. மது மற்றும் போதை ஒழிப்பு*

*மதுபானமும் போதைப்பொருளும் உலகின் எந்த இடத்திலும் மனித மற்றும் சமூக முன்னேற்றத்துக்கு பிரதான தடைக்கல்லாக இருக்கிறது. சட்டவிரோத போதைப்பொருட்களை தடுக்க 2015 இல் பொலிஸ் திணைக்களத்தால் பாரிய எண்ணிக்கையிலான தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன இதன் மூலம் சமூகத்தில் இருந்து சட்டவிரோத போதைப்பொருட்களை வேரோடு அழிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. விசேட அதிரடிப்படையினரது உதவியும் இதற்கு பெறப்பட்டதுடன் இது தொடர்பான தகவல்கள் அட்டவணை 7,8,9,10 இல் தரப்பட்டுள்ளது.*

### *6.1 மதுவுடன் தொடர்புபட்ட சுற்றிவளைப்புக்கள்*

*அட்டவணைக்கு அமைய மதுவுடன் தொடர்புபட்ட குற்றங்கள் 2013 முதல் இன்றுவரை குறைவடைந்துள்ளதுடன் விசாரணைகளும் வளர்ச்சியடைந்துள்ளது.*

*வணை இல 07*

| # | மதுவரி குற்றங்கள் | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது |
| 1. | சட்டவிரோத மதுபான உற்பத்தி | 8,529 | 8,125 | 7,041 | 6,576 | 8459 | 99 |
| 2. | உரிமமின்றிய கள் உற்பத்தி | 49 | 48 | 21 | 21 | 30 | 29 |
| 3. | அரசாங்கத்திற்கு சொந்தமான மதுபான சட்டவிரோத உற்பத்தி | 29 | 25 | 45 | 41 | 19 | 19 |
| 4. | சட்டவிரோத ஸ்பிரிட் உற்பத்தி | 344 | 302 | 712 | 689 | 665 | 624 |
| 5. | சட்டவிரோதமாக மதுபானத்தை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் | 85,655 | 82,436 | 82,042 | 79,386 | 83807 | 80897 |
| 6. | சட்டவிரோதமாக கள் வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் | 7,241 | 6,678 | 6,160 | 5,900 | 5392 | 5025 |
| 7. | அரசாங்கத்திற்கு சொந்தமான மதுபானத்தை உரிமமின்றி விற்பனை செய்தல் அல்லது 7.5 லீட்டரை விட அதிகமாக வைத்திருத்தல் | 14,354 | 13,692 | 12,358 | 11,421 | 10019 | 9475 |
| 8. | உரிமமின்றி மதுவை விற்பனை செய்தல்/விற்பனைக்காக வைத்திருத்தல் | 1,889 | 1,775 | 1,479 | 1,427 | 1593 | 1501 |
| 9. | சட்டவிரோதமாக ஸ்பிரிட் உற்பத்தி செய்தல் /விற்பனைக்காக வைத்திருத்தல் | 487 | 474 | 545 | 540 | 355 | 343 |
| 10 | தகுந்த உரிமம் இன்றி அரசாங்கத்திற்கு சொந்தமான மதுபானத்தை கொண்டு செல்லல் சட்ட விரோத மதுபானம் / கள்/ஸ்பிரிட் கொண்டு செல்லல் (7.5 லீட்டரை ஐ விட அதிகமானது) | 351 | 341 | 355 | 336 | 252 | 237 |
| 11. | சட்டவிரோதமாக மது/ கள்/ஸ்பிரிட் உற்பத்திக்கான பொருட்களை வைத்திருத்தல் | 487 | 458 | 351 | 344 | 523 | 506 |
| 12. | மதுவரியின் கீழான ஏனைய தவறுகள் | 5,188 | 4,844 | 3,681 | 3,553 | 2830 | 2601 |
| | **மொத்தம்** | **124,603** | **119,198** | **114,790** | **110,234** | **113944** | **109256** |

மூலம்: பொலிஸ் போதை தடுப்பு பணியகம்

### *6.2 போதைப்பொருள் தொடர்பிலான கைதுகள்*

இதன் மூலம் பெருமளவு சக்திவாய்ந்த ஆபத்தான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன் இத்தகைய தேடுதல்கள் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

*அட்டவணை இல 08*

| போதை பொருட்கள் | கைப்பற்றப்பட்டஅளவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2013** | | | **2014** | | | **2015** | | |
| | கி.கி | கி | மி.கி | கி.கி | கி | மி.கி | கி.கி | கி | மி.கி |
| கஞ்சா | 10361 | 336 | 365 | 10758 | 19 | 886 | 13253 | 55 | 225 |
| அபின் | - | 496 | 150 | - | 5 | - | - | 249 | 500 |
| கஷிஸ் | - | 274 | 5 | 1 | 95 | 107 | 4 | 187 | 630 |
| ஹெராயின் | 337 | 859 | 965 | 312 | 549 | 4 | 44 | 521 | 89 |
| மார்பின் | - | 112 | 130 | - | - | 90 | - | - | - |
| கொகேயன் | - | - | - | - | 2 | 964 | 81 | 672 | 333 |
| ஏனையவை | 139 | 700 | 185 | 46 | 852 | 961 | 166 | 751 | 909 |
| **மொத்தம்** | **10837** | **2777** | **1800** | **11117** | **1522** | **3012** | **13548** | **2435** | **2686** |

*மூலம்: புள்ளிவிபரவியல் பிரிவு*

*அட்டவணை இல 09*

| # | போதை பொருட்கள் | **2013** | | **2014** | | **2015** | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதியப் பட்டது | தீர்வு காணப் பட்டது | பதியப் பட்டது | தீர்வு காணப் பட்டது | பதியப் பட்டது | தீர்வு காணப் பட்டது |
| 1 | கஞ்சா | 45,921 | 44,651 | 46,884 | 45,997 | 57921 | 56747 |
| 2 | அபின் | 11 | 10 | 1 | 1 | 4 | 4 |
| 3 | கஷிஸ் | 10 | 10 | 752 | 660 | 19 | 15 |
| 4 | ஹெராயின் | 24,400 | 22,966 | 23,578 | 22,041 | 26991 | 26397 |
| 5 | மார்பின் | 12 | 12 | 2 | 2 | - | - |
| 6 | கொகேயன் | 0 | 0 | 4 | 4 | 352 | 328 |
| 7 | ஏனையவை | 3,029 | 3,029 | 3,145 | 3,007 | 4709 | 4355 |
| | **மொத்தம்** | **73,383** | **70,678** | **74,366** | **71,712** | **89996** | **87846** |

*மூலம்: புள்ளிவிபரவியல் பிரிவு*

*அட்டவணை இல 10*

| # | போதை பொருட்கள் | சம்பவங்களின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட அளவு | கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| *1.* | கஞ்சா | *264* | *2,062.594* கிலோ<br>*Chenas-145* ஏக்கர்கள்<br>*1,380, 721* செடிகள் | *260* |
| *2.* | கஷிஸ் | *00* | *00* | *00* |
| *3.* | ஹெராயின் | *151* | *434.662* கிராம்கள் | *167* |
| *4.* | ஏனையவை (மதன மோதகம்) | *05* | *03.106* கிலோ | *05* |
| *5.* | அபின் | *00* | *00* | *00* |
| *6.* | மார்பின் | *00* | *00* | *00* |
| *7.* | கொகேயன் | *00* | *00* | *00* |

*மூலம் : விசேட அதிரடிப்படை*

## *07. ஊழல் மற்றும் நியதிச் சட்ட குற்றங்களுடன் தொடர்புபட்ட தேடுதல்கள்*

*இந்த பிரிவினை சேர்ந்த குற்றங்கள் சமூகவிரோத குற்றங்கள் என அழைக்கப்படலாம். இது அனைத்து சமூக நிலைகளையும் உடைத்து சமூகத்திற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.ஊழல் மற்றும் சட்டவியல் ரீதியான குற்றங்களுடன் தொடர்புபட்ட தேடுதல்கள் லஞ்சத்தை ஒழிக்கும் வகையிலான வினைத்திறன் மிக்க பொலிசாரின் தேடுதலாக முன்னிலைப்படுத்தப்படும். இந்த இரண்டு வகையையும் சேர்ந்த பதியப்பட்ட குற்றங்கள் 2013 முதல் 2015 வரையான காலப்பகுதியில் பாரியளவில் குறைவடைந்துள்ளன.*

*அட்டவணைக்கு அமைய 2015 இல் ஊழலுடன் தொடர்புபட்ட 1796 குற்றங்களில் 1788 க்கு தீர்வுகாணப்பட்டதன் மூலம் 99% முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. இது முன்னைய வருடத்தில் 96% மாக காணப்பட்டது.*

*பதிவு செய்யப்பட்ட 46290 சட்டவியல் குற்றங்களில் 43896 க்கு தீர்வு வழங்கப்பட்டதன் மூலம் 94% அடையப்பட்டது. இத்தகைய குற்றங்களில் முன்னைய இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும்போது சடுதியான வீழ்ச்சி காணப்படுவதை கீழே உள்ள அட்டவணையில் அவதானிக்கலாம்.*

*அட்டவணை இல **11***

| # | குற்றங்கள் | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது |
| 1 | ஊழல் | 2724 | 2627 | 1921 | 1856 | 1796 | 1788 |
| 2 | சட்டவியல் குற்றங்கள் | 73124 | 69541 | 54877 | 52998 | 46290 | 43969 |

*மூலம்: - பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு*

### *7.1* **விசேட அதிரடிப்படையினரின் ஊழல் மற்றும் சட்டவியல் குற்றங்களுடன் தொடர்புபட்ட தேடுதல்கள்.**

*ஊழல் மற்றும் சட்டவியல் குற்றங்களுடன் தொடர்புபட்ட தேடுதல்களுக்கு கணிசமான அளவு உதவியை விசேட அதிரடிப்படையினர் வழங்கியிருந்தார்கள் .இதன் மூலம் இத்தகைய தேடுதல்களை வெற்றிகரமாக மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. 2015 இல் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்கள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்படுகிறது.*

*அட்டவணை இல 12*

| # | குற்றங்கள் | சம்பவங்களின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட அளவு | கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பழுதடைந்த தேயிலை | 29 | 325,655.900 கிலோ | 45 |
| 2 | கால்நடைகள் கடத்தல் | 31 | 272 கால்நடைகள் | 75 |
| 3 | பாவனைக்குதவாத இறைச்சி | 19 | 3,460.900 kg | 57 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் | 23 | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்கள் - 16<br>ரிவோல்வர்கள் - 02<br>டேரோனேட்டர்கள் – 336<br>கைக்குண்டுகள் – 04<br>[illegible] | 26 |
| 5. | சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு | 58 | அமுக்கிகள் – 12<br>பக்கோ - 22 | 125 |
| 6. | போதை ஏற்படுத்தும் குடிவகைகள் | 256 | அரசாங்கத்திற்குசொந்தமான மதுபானம்-454 3/4<br>கள்– 16,002 ½ | 284 |
| | சிகரட்டுக்கள் | 25 | 201,384 | 26 |
| 7. | ஏனையவை | 38 | -- | 81 |

மூலம்: – விசேட அதிரடிப்படை







**ஊழல் மற்றும் நியதிச் சட்ட குற்றங்களுடன் தொடர்புபட்ட தேடுதல்களுடன் தொடர்புபட்ட புகைப்படங்கள்**

## *08*. வாகன முகாமைத்துவமும் வீதிப் பாதுகாப்பும்

*பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகளுக்கு பாதுகாப்பான இடமாக வீதியை வைத்திருத்தல் பாரிய சவாலாகும். அதிலும் நகரத்துக்கு வரும் பொதுமக்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரிப்பதுடன் வாகனங்களின் எண்ணிக்கையில் வேகமான அதிகரிப்பும் காணப்படும்போது சிக்கல் வாய்ந்த நிலையாகும். இந்த சிக்கலான பிரச்சினையில் வீதி விபத்துக்களை குறைத்து வீதிப் பாதுகாப்பினை உறுதி செய்ய பாரியளவு மனித வளமும் பொலிஸ் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகிறது.*
*எவ்வாறாயினும் கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும்போது 2015 இல் இடம்பெற்ற சேதம் விளைவித்த விபத்துக்களை தவிர ஏனைய அனைத்து விபத்துக்களும் அதிகரித்திருப்பதை அவதானிக்கலாம். உயிர்ச்சேதம் விளைவித்த மற்றும் பாரிய விபத்துக்களில் அதிகரிப்பு காணப்படுகிறது. பாதசாரதிகளினதும் சாரதிகளின் கவலையீனமும் விதிகளை சரிவர பின்பற்றாமையுமே இதற்கான காரணமாகும். 2015 இல் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பிலான தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

*அட்டவணை இல **13***

| ஆண்டு | ஆண்டு | உயிராபத்து விபத்துக்கள் | பாரிய விபத்துக்கள் | சிறிய விபத்துக்கள் | சேதத்துக்குள்ளான விபத்துக்கள் | உயிராபத்து விபத்தினால் இறந்தவர்களின் தொகை | வாகனங்களின் எண்ணிக்கை | *1000* வாகனங்களுக்கு இடம்பெற்ற விபத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ***2013*** | *2,190* | *6,870* | *13,525* | *15,292* | *37,877* | *2,324* | *5,203,678* | *7* |
| ***2014*** | *2,261* | *6,847* | *12,950* | *13,992* | *36,050* | *2,436* | *5,633,234* | *6* |
| ***2015*** | *2,590* | *7,719* | *13,095* | *13,514* | *36,918* | *2,801* | *6,302,141* | *5* |

*மூலம்: புள்ளிவிபரவியல் பிரிவு*

### *8.1 வீதி விபத்துக்களை தடுப்பது தொடர்பிலான நிகழ்சிகள் (விழிப்புணர்வு நிகழ்சிகள்)*

*விபத்துக்களை குறைப்பதற்கு வீதி விதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து சமூக மட்டத்தினரையும் உள்ளடக்கிய விழிப்புணர்வு நிகழ்சிகளை பொலிஸ் திணைக்களம் நடத்துகிறது. 2015 இல் இடம்பெற்ற இத்தகைய நிகழ்சிகள் தொடர்பிலான விடயங்கள் கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

*- டவணை இல **14***

| நிகழ்ச்சி | எண்ணிக்கை |
|---|---|
| பாடசாலை மாணவர்கள் மற்றும் போக்குவரத்து காவலர்கலுக்கான ப்புணர்வு விரிவுரைகள் | *99* |
| அரசு நிறுவனங்கள் அவற்றின் உத்தியோகத்தர்கள், சாரதிகளுக்கான ப்புணர்வு விரிவுரைகள் | *10* |
| சாரதிகள் மற்றும் பாதசாரிகளுக்கான விழிப்புணர்வு விரிவுரைகள் | *80* |
| முப்படையினருக்கான விழிப்புணர்வு விரிவுரைகள் | *14* |
| வீதியை கவன குறைவாக பாவிக்கும் பாதசாரிகளுக்கான விழிப்புணர்வு | *11392* |

*மூலம்: பொலிஸ் போக்குவரத்துப்பிரிவு*

## *09. ஏனைய பொதுமக்கள் சேவைகள்*

### *9.1 சமூக பொலிஸ் சேவைகள்*

*பொதுமக்கள் நட்புறவு பொலிஸ் சேவையை வழங்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட சிவில் பாதுகாப்பு குழுவானது இன்றுவரை பொதுமக்களால் பாராட்டப்படும் ஒன்றாக விளக்குகிறது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சிறந்த சேவையை வழங்கிய சிவில் பாதுகாப்பு குழு நாடுபூராவும் இயங்குநிலையில் காணப்படுவதுடன் பொதுமக்களது நேரடி ஒத்துழைப்பினை பெற்று விழிப்புணர்வை வழங்குவதன் மூலம் கிராமம்,நகரம் நாட்டில் இடம்பெறும் பிரச்சினைகளுக்கு எதிராக பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறது.*
*2015 இல் இடம்பெற்ற சமூக பொலிஸ் நடவடிக்கைகள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

*அட்டவணை இல **15***

| 2015 ல் பிரதேச மட்டத்தில் விழிப்புணர்வு மற்றும் செயற்பாடுகளை உருவாக்குதல் | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | | | | | | | | | செயற்பாடுகள் | | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |
| சமூகத்துக்கு விழிப்புணர்வு விரிவுரைகளை வழங்குதல் உதா: பெண்கள்/சிறுவர்களுக்கு எதிரான வன்முறை/குற்றங்கள்/ வாகனங்கள்/போதை | டெங்கு முதலிய தொற்று நோய்கள் தொடர்பிலான விழிப்புணர்வு | பாடசாலை மாணவர்களுக்கு சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள்/சிறுவர் துஷ்பிரயோகம்/தலைமைத்துவம் தொடர்பிலான விழிப்புணர்வு விரிவுரைகள் | பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு தொழிநுட்ப பயிற்சி தொடர்பிலான செயலமர்வு மற்றும் விரிவுரைகள் உதா: தொழிற்பயிற்சி சபை தொழிநுட்ப கல்லூரி | பாடசாலை வாகன சாரதிகள் மற்றும் உதவியாளர்களுக்கான விழிப்புணர்வு | பஸ்/முச்சக்கரவண்டி/லொறி/ஏனைய வாகன சாரதிகள் மற்றும் நடத்துனர்கள்/பிரயாணிகள் மற்றும் பாவனையாளர்கள் ஆகியோருக்கான விழிப்புணர்வு | போதை பொருள் பாவனை/மது என்பவற்றை இல்லாதொழிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | ஏனையவை | மொத்தம் | பாடசாலை மாணவர்களுக்கு இடையில் விவாதப் போட்டி/சித்திரப் போட்டி ஏனைய போட்டிகளை நடாத்துதல் | சமூகத்தின் ஒத்துழைப்புடன் விழாக்களை ஏற்பாடு செய்தல் உதா: புதுவருடவிழா / சமய விழாக்கள்/ கிரிக்கெட்/ கைப்பந்து முதலிய போட்டிகளை நடாத்துதல் | சமயங்களுக்கு இடையில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் | வீதிகள்/புதர்கள் ஏனைய இடங்களை துப்பரவு செய்வதற்கான சிரமதானங்களை ஏற்பாடு செய்தல் உதா. டெங்கினை தடுத்தல்/குளங்களை துப்பரவாக்கல் | வீதிகளை திருத்துதல் வீடுகளைநிர்மாணித்தல் போன்ற சமூக சேவைகள் | சிவில் பாதுகாப்புக் குழுக்களிடம் இருந்து பயன்மிக்க தகவல்களை பெற்றுக்கொண்டமை | ஏனைய செயற்பாடுகள் | மொத்தம் |
| 18741 | 138963 | 23456 | 3969 | 10173 | 25435 | 63988 | 30951 | 484346 | 1374 | 9926 | 6962 | 26884 | 4027 | 10672 | 11459 | 71304 |

*மூலம்: சமூக பொலிஸ் பொலிஸ் பிரிவு*



பாதுகாப்பற்ற புகையிர கடவையை பரிசீலித்தல்



பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுட்டல் வழங்குதல்

## 9.2 சூழல் பாதுகாப்பு

சுகாதாரமான சூழலின் ஊடக உடல் உள ஆரோக்கியமான சமுதாயத்தை வளர்க்கும் நோக்குடன் சூழல் பாதுகாப்பு தொடர்பில் இலங்கை பொலிஸ் அளப்பெரிய கவனம் செலுத்தி வருகிறதுஇந்த அடிப்படையில் 2015 இலும் முன்னைய வருடங்களிலும் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

- கொழும்பு நகரில் உள்ள 13 கால்வாய்கள் மாசடைவதை தடுப்பதற்கு கடற்படையினரின் உதவியுடன் வாரமொருமுறை படகு பயணங்களை நடத்துதல்.
- நகர சுத்தத்தை மேற்பார்வை செய்ய நாளில் இருமுறை மோட்டார் சைக்கிள் பயணங்களை நடத்துதல்.
- 13.02.2015 முதல் 23.02.2015 வரை தேசிய நுளம்பு தடுப்பு வாரம் இடம்பெற்றதுடன் விழிப்புணர்வை ஏற்படுத்த சிவப்பு பிரசுரம், மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது.



மேற்பார்வை செய்ய துவிச்சக்கர வண்டிகளை வழங்குதல்



கடற்கரையை துப்பரவு செய்தல்

## 9.3 பொதுமக்களது முறைப்பாடுகளுக்கு தீர்வினை வழங்கும் சேவை

பொலிஸ் நிலையங்களின் மூலம் தீர்க்கப்படும் பொதுமக்களது முறைப்பாடுகளுக்கு மேலதிகமாக வினைத்திறனான முறையில் பொதுமக்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இதன் இச் சேவை உருவாக்கப்பட்டது

அட்டவணை இல **16**

| முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட முறை | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்வுகாணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொ.மா அதிபரின் பொதுமக்கள் தினம் | 1055 | 780 |
| 119 அவசர அழைப்பு சேவை | 903245 | 899181 |
| பொ.மா அதிபரிடம் சொல்லுங்கள் | 2082 | 2019 |
| பொதுமக்கள் உதவிச் சேவை | 1881 | 1429 |

மூலம்: ஆய்வு மற்றும் திட்டமிடல் பிரிவு

### *9.4 பொதுமக்கள் பொலிஸ் உறவுகள் தொடர்பிலான ஆய்வுகள்*

- *பொலிஸ் தொடர்பிலான பொதுமக்களது அணுகுமுறை பற்றிய ஆய்வு 2011 முதல் தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. ஆசிய மன்றத்தின் உதவியுடன் இது பொலிஸ் ஆய்வு மற்றும் திட்டமிடல் பிரிவினால் முன்னெடுக்கப்படுகிறது.*
- *2015 இல் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் தொடர்பிலான பொதுமக்களது அணுகுமுறை பற்றிய ஆய்வு 2014 ம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

*2014 உடன் ஒப்பிடும்போது வடக்கு,கிழக்கு,சப்பிரகமுவ,ஊவா மாகாணங்களில் சமூக பாதுகாப்பு தொடர்பிலான பொதுமக்களது அணுகுமுறை கீழ் உள்ளதற்கு அமைய வளர்ச்சி அடைந்துள்ளது.*

*அட்டவணை இல 17*

| மாகாணம் | 2014 ம் ஆண்டு | 2015 ம் ஆண்டு |
|---|---|---|
| வடக்கு | 16% | 24% வரை |
| கிழக்கு | 24% | 34% வரை |
| சப்பிரகமுவ | 22% | 35% வரை |
| ஊவா | 29% | 48% வரை |

*மூலம்: ஆய்வு மற்றும் திட்டமிடல் பிரிவு*

- *2014 இல் கிழக்கு மாகாணத்தில் குற்றங்களால் பாதிக்கப்படகூடிய சாத்தியம் 30% ஆக இருந்ததுடன் இது இவ்வருடம் அது 5% மாக குறைவடைந்துள்ளது.*
- *61% மான பதிலளித்தோர் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகம் வினைத்திறனாக செயற்படுவதாக தெரிவித்திருந்தார்கள்.*
- *தென் மாகாணத்தில் பொதுமக்களுக்கும் பொலீசாருக்கும் இடையிலான உறவு 59% இல் இருந்து 79% மாக அதிகரித்துள்ளது.*
- *பொலிசாரின் சேவையில் காணப்படும் ஊழல் 24% இல் இருந்து 6% மாக குறைவடைந்துள்ளமையை ஆய்வு காட்டுகிறது.*
- *பொலிசாரின் சேவையில் அரசியல் செல்வாக்கு காரணமாக இடம்பெறும் இடையூறு 56% இல் இருந்து 39% மாக குறைவடைந்துள்ளமை ஆய்வில் இருந்து புலப்படுகிறது.*

## *10.* மனித வள மேம்பாடு

பாரியளவு மனித வளங்களை கொண்டுள்ள திணைக்களங்களில் பொலிஸ் திணைக்களமும் ஒன்றாகும். இதனுடைய மனித வளங்களை உச்சபட்சமாக திணைக்களம் பயன்படுத்துகிறது முறையான பொதுமக்கள் சேவையை வழங்கும் நோக்குடன் முறையான ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு திட்டங்களின் மூலம் நேர அடிப்படையில் மனித வளங்களை ஆட்சேர்ப்பு செய்து அவர்களுக்கு தொழில்முறை அறிவினை வழங்கி வளப்படுத்தி தொழில் திருப்தியை வழங்குகிறது.

### *10.1* ஆட்சேர்ப்புக்கள்

கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணைகள் பொலிஸ் செவையினதும்,விசேட அதிரடிப்படையினதும் ஆட்சேர்ப்பு விபரங்களை காட்டுகின்றன

- **பொது பொலிஸ் சேவை**

அட்டவணை இல 18

| தரம் | திகதி | ஆட்சேர்ப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| பொலிஸ் கொஸ்தாபிள் (பொது) | 2015.11.15 | 613 |
| பொலிஸ் கொஸ்தாபிள் சாரதி (பொது ) | 2015.05.18 | 300 |
| பொலிஸ் கொஸ்தாபிள் (அரச புலனாய்வு சேவை ) | 2015.04.19 | 82 |
| பெண் பொலிஸ் கொஸ்தாபிள் (பொது) | 2015.10.01 | 319 |
| உதவி பரிசோதகர் (பொது) | 2015.07.06 | 67 |
| பெண் உதவி பரிசோதகர் (பொது ) | 2015.06.20 | 38 |

மூலம்: ஆட்சேர்ப்பு பிரிவு

- **விசேட அதிரடிப்படை**

அட்டவணை இல 19

| தரம் | திகதி | ஆட்சேர்ப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| பொலிஸ் கொஸ்தாபிள் (வி.அ.ப) | 2015.02.14 | 106 |
| உதவி பரிசோதகர் (வி.அ.ப) | 2015.06.18 | 55 |
| பெண் உதவி பரிசோதகர் (வி.அ.ப) | 2015.06.18 | 04 |

மூலம்: ஆட்சேர்ப்பு பிரிவு





பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

## *10.2 ஆட்சேர்ப்புக்கள்*

*நேர அடிப்படையில் பொருத்தமான பதவி உயர்வு நடைமுறையின் கீழ் ஒவ்வொரு தரத்தினையும் உயர்த்துதல் தொழில்முறை அபிவிருத்திக்கு முக்கியமானதாகும். இதன் விளைவாக திருப்த்திகரமான பொலிஸ் உத்தியோகத்தரை உருவாக்க முடியும். நாட்டின் அபிவிருத்திக்கு அதியுயர் சேவையை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அமுலாக்கப்பட்ட பதவி உயர்வு நடைமுறை கீழே காட்டப்பட்டுள்ளது.*

- ***பொது பொலிஸ் சேவை***

*அட்டவணை இல 20*

| *தரம்* | *எண்ணிக்கை* |
|---|---|
| *சி.பி.பொ.அ* | *04* |
| *பி.பொ.அ* | *03* |
| *உ.பொ.அ* | *02* |
| *பி.பொ.ப* | *128* |
| *உ.பொ.ப / பெ.உ.பொ.ப* | *1090* |
| *உ.பொ.ப போக்குவரத்து* | *74* |
| ***மொத்தம்*** | ***1301*** |

*மூலம்: தனியாள் மற்றும் பதிவு பிரிவு*

- ***விசேட அதிரடிப்படை***

*அட்டவணை இல 21*

| *தரம்* | *எண்ணிக்கை* |
|---|---|
| *பொ.ப / பெ.பொ.ப* | *93* |
| *உ.பொ.ப போக்குவரத்து* | *04* |
| *பொ.சா / பெ.பொ.சா* | *722* |
| *பொ.சா.சா* | *23* |
| ***Total*** | ***842*** |

*மூலம்: தனியாள் மற்றும் பதிவு பிரிவு*

## *10.3 பயிற்சி*

*பயிற்சிநெறிகள் தொழில் தகமை பெற்ற சட்டத்தை மதிக்கும் உத்தியோகத்தரை உருவாக்கும் என்ற நிரூபிக்கப்பட்ட உண்மைக்கு அமைய பொலிஸ் திணைக்களம் தொடர்ச்சியான முறையில் தன்னுடைய படையினருக்கு பரந்துபட்ட விடய தானங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறிகளின் ஊடாக அறிவு மற்றும் திறனை வழங்கி பலப்படுத்துகிறது.கீழே காட்டப்பட்ட அட்டவனைகளுக்கு அமைய இவ்வருடத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டார்கள்*

- ***உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சி***

*அட்டவணை இல 22* *இலங்கை பொலிஸ் கல்லூரியால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்சிகள்*

| **தொ. இல** | **பயிற்சி நெறி** | **பயிற்சி நெறிகளின் எண்ணிக் கை** | **பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| ***1*** | *பொலிஸ் கொஸ்தாபிள் சாரதிகளுக்கான பயிற்சி நெறி (அடிப்படை பயிற்சி)* | *5* | *278* |
| ***2*** | *பொலிஸ் கொஸ்தாபிள் சாரதிகளுக்கான பயிற்சி நெறி (கனரக வாகனங்கள்)* | *9* | *215* |
| ***3*** | *பிரதம பொலிஸ் பரிசோதகர்களுக்கு அவர்களது பதவியை ஏற்றுக்கொள்வதற்கான பயிற்சி நெறி* | *2* | *109* |
| ***4*** | *குற்றப் புலனாய்வு பயிற்சி நெறி* | *2* | *40* |
| ***5*** | *குற்றம் நடந்த இடத்தை பரிசோதிப்பதற்கான பயிற்சி நெறி* | *2* | *49* |
| ***6*** | *குற்றப் புலனாய்வு* | *1* | *15* |
| ***7*** | *பொலிஸ் சார்ஜன்ட் சாரதியாக இருந்து உப பரிசோதகராக பதவியுயர்வு பெற்றவர்களுக்கான பயிற்சி நெறி* | *2* | *174* |
| ***8*** | *பொது ஒழுங்கு முகாமைத்துவ பயிற்சி (ரியொட்)* | *2* | *83* |
| ***9*** | *குற்றம் நடந்த இடத்தை முகாமை செய்வதற்கும் பயிலுனருக்கான பயிற்சியை வழங்குவதற்கான பயிற்சி நெறி* | *2* | *49* |
| ***10*** | *பொலிஸ் உத்தியோகத்தர்களின் திறனையும் பாங்கையும் அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சி நெறி* | *1* | *48* |
| ***11*** | *போதையுடன் தொடர்புபட்ட குற்றங்கள் மற்றும் குற்றப் புலனாய்வு* | *1* | *72* |
| ***12*** | *கொள்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி* | *5* | *219* |
| ***13*** | *பதில் பொலிஸ் சார்ஜன்ட் பயிற்சி* | *4* | *280* |
| *மொத்தம்* | | ***38*** | ***1631*** |

*மூலம்: இலங்கை பொலிஸ் கல்லூரி*

*அட்டவணை இல 23*

*பொலிஸ் கல்லூரியால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்சிகள்*

| தொ.இல | டிப்ளோமா பாடநெறிகள் | வருடத்தில் நடாத்தப்பட்ட பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை | பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ***1*** | பொலிஸ் விஞ்ஞானம் | *1* | *60* |
| ***2*** | குற்றப் புலனாய்வு | *2* | *77* |
| ***3*** | வேறுபட்ட முறைப்பாடுகளின் விசாரணை | *2* | *85* |
| ***4*** | வழக்குகளை கையாளுதல் | *2* | *86* |
| ***5*** | சமூக பொலிஸ்<br>வர்த்தமானி உத்தியோகத்தர்களுக்கானது | *1* | *17* |
| | சான்றிதழ் பயிற்சிநெறிகள் | | |
| ***6*** | பிரயோக விஞ்ஞானம் | *3* | *117* |
| ***7*** | தடயவியல் மருத்துவம் | *3* | *118* |
| ***8*** | தொழில்நுட்ப அடிப்படையிலான குற்றப் | *3* | *131* |
| ***9*** | பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் | *2* | *73* |
| ***10*** | பால் ரீதியான வன்முறைகள் | *2* | *74* |
| ***11*** | மனித உரிமைகள் | *1* | *43* |
| ***12*** | கணணி குற்றங்கள் | *2* | *79* |
| ***13*** | வணிக குற்றங்கள் | *2* | *94* |
| ***14*** | முகாமைத்துவ திறன் அபிவிருத்தி | *2* | *74* |
| ***15*** | சூழல் சட்டத்தை அமுல்படுத்தல். | *2* | *68* |
| ***16*** | நிறுவன முகாமைத்துவ பாடநெறி<br>தலைமையக பரிசோதகர் / பொறுப்பதிகாரி | *9* | *217* |
| ***17*** | தலைமைதத்துவ நெறிமுறைகள்<br>வர்த்தமானி அலுவலர்களுக்கனது (ஒருநாள் செயலமர்வு) | *4* | *76* |
| ***18*** | அவுஸ்ரேலிய மத்திய பொலிசாரால் | *1* | *23* |
| ***19*** | சமூக பொலிஸ் பயிலுனருக்கான பயிற்சி | *9* | *248* |
| ***Total*** | | ***53*** | ***1791*** |

*மூலம்: பொலிஸ் கல்லூரி*

*அட்டவணை இல 24*

*பொலிஸ் சேவைக்கால பயிற்சி பிரிவினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்சிகள்*

| **தொ.இல** | **நிகழ்ச்சி/திட்டம்** | **காலப்பகுதி** | **பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| ***1*** | களத்தில் உள்ள கனிஸ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | *2015.01.01 – 2015.12.31* | *26,870* உத்தியோகத்தர்கள் |
| ***2*** | பயற்சி பிரிவுகளுக்கு இணைக்கப்பட்ட பொலிஸ் பயிலுனர் | *2015.01.01 – 2015.12.31* | *69* பயிலுனர்கள் |

*மூலம்: பொலிஸ் சேவைக்கால பயிற்சி பிரிவு*

- ***வெளிநாட்டு பயிற்சி***

*2014 இல் 115 சந்தர்ப்பங்களில் 240 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகளுக்கு அனுப்பபப்பட்டு இருந்தார்கள்.*
*ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படைகளுக்கு கடமைக்கு அனுப்பபப்பட்ட உத்தியோகத்தர்களை கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.*

*அட்டவணை இல 25*

| **தரம்** | **எண்ணிக்கை** |
|---|---|
| சி.பி.பொ.அ | 02 |
| உ.பொ.அ | 02 |
| பி.பொ.ப | 08 |
| பொ.ப | 11 |
| பொ.சா | 03 |

*மூலம்: தனியாள் மற்றும் பதிவு பிரிவு*







*பயிற்சியும் வெளியாகுதலும் தொடர்பிலான படங்கள்*

## *11. பௌதீக வள மேம்பாடு*

*மனித வளங்களின் மூலம் வினைத்திறன் மிக்க பயனான சேவையை பெற்றுக்கொள்ள பௌதீக வளங்கள் வழங்கப்படுதல் வேண்டும். 24 மணித்தியால தொடர்ச்சியான சேவையை வழங்கும் நிறுவனமாக 015 இல் பௌதீக வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்தி பொலிஸ் திணைக்களம் தனது கடமையை மேற்கொண்டது. பௌதீக வளங்களின் அபிவிருத்திக்கு 2015 இல் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களை கீழ் உள்ள அட்டவணை காட்டுகிறது.*

- ***2015 இல் நிர்மாணங்கள்***

*அட்டவணை இல 26*

| **தொ.இல** | **கட்டிட வகை** | **நிர்மாணங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| *1* | *பொலிஸ் நிலையங்கள்* | *5* |
| *2* | *பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம்* | *2* |
| *3* | *முன் கட்டமைக்கப்பட்ட கட்டிடங்கள்* | *153* |
| *4* | *பொலிஸ் கல்லூரி / பொது பயிற்சி கல்லூரி* | *1* |
| *5* | *சுற்றுலா விடுதி* | *2* |

*மூலம்: கட்டிடப் பிரிவு*






*கட்டடங்களை திறத்தல்*

### 11.1 ஏனைய பௌதீக சார் சேவைகள்

கீழ் உள்ள அட்டவணைக்கு அமைய 2015 இல் பாரிய செலவினைக் கொண்டு உற்பத்தித்திறன் மிக்க பொலிஸ் சேவைக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை இல 27

| இல | வருமானத் தலைப்பு | அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் | 2015 ற்கான ஒதுக்கீடு | 31-12-2015 இல் செலவு | பௌதீக அபிவிருத்தி |
|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவுகள்** | | | | | |
| 1 | 225-1-2-0-1203- (1) | சீருடைகள் | 549,959,358.00 | 527,368,231.00 | 95.89 |
| 2 | 225-1-2-0-1203- (5) | விலங்குகளுக்கான உணவு | 6,000,000.00 | 5,978,801.00 | 99.65 |
| 3 | 225-1-2-0-1203- (6) | கேளிக்கை செலவினம் | 13,150,642.00 | 13,150,636.00 | 100.00 |
| **மொத்தம் ரூபாவில்** | | | **569,110,000.00** | **546,497,668.00** | **96.03** |
| 4 | 225-1-2-0-1205- (5) | களஞ்சிய உபகரணங்கள் | 163,325,000.00 | 129,967,875.00 | 79.58 |
| 5 | 225-1-2-0-1205- (9) | புல்லட்கள் | 2,000,000.00 | 890,049.00 | 44.50 |
| 6 | 225-1-2-0-1205- (7) | கைவிரல் அடையாள உபகரணங்கள் | 7,000,000.00 | 5,104,724.00 | 72.92 |
| 7 | 225-1-2-0-1205- (8) | புகைப்பட உபகரணங்கள்<br>குற்றப்புலனாய்வு ஆய்வுகூடத்திற்கான உபகரணங்கள் | 10,000,000.00 | 5,576,379.00 | 55.76 |
| **மொத்தம் ரூபாவில்** | | | **182,325,000.00** | **141,539,027.00** | **77.63** |
| 8 | 225-1-2-0-1205- (10) | பத்திரிகை விளம்பர செலவு | 4,000,000.00 | 3,948,638.00 | 98.72 |
| 9 | 225-1-2-0-1205- (11) | கொள்வனவு சபைக்கான செலவு | 1,000,000.00 | 891,672.00 | 89.17 |
| 10 | 225-1-2-0-1508 | புகையிரத கதவு செயற்பாடுகளுக்கான கூலி | 1,310,000.00 | 1,233,186.00 | 94.14 |
| **மொத்தம் ரூபாவில்** | | | **6,310,000.00** | **6,073,496.00** | **96.25** |
| மொத்த மீண்டெழும் செலவுகள் | | | **757,745,000.00** | **694,110,191.00** | **91.60** |
| **மூலதன செலவுகள்** | | | | | |
| 11 | 225-1-2-0-2102- (1) | தளபாடம் | 66,600,000.00 | 66,575,877.00 | 99.96 |
| 12 | 225-1-2-0-2102- (2) | காகிதாதிகள் | 3,300,000.00 | 3,282,384.00 | 99.47 |
| 13 | 225-1-2-0-2102- (3) | நலன்புரி | 6,000,000.00 | 5,932,203.00 | 98.87 |
| 14 | 225-1-2-0-2102- (4) | அலுவலக உபகரணம் | 7,300,000.00 | 7,207,954.00 | 98.74 |
| 15 | 225-1-2-0-2102- (5) | மின் சாதனங்கள் | 32,600,000.00 | 32,500,544.00 | 99.69 |
| 16 | 225-1-2-0-2102- (6) | கணணிகள் | 59,200,000.00 | 59,144,466.00 | 99.91 |
| **மொத்தம் ரூபாவில்** | | | **175,000,000.00** | **174,643,428.00** | |
| 17 | 225-1-2-0-2103- (1) | ஆயுதம் | 500,000.00 | | |
| 18 | 225-1-2-0-2103- (2) | பொருட்கள் | 5,300,000.00 | | |
| 19 | 225-1-2-0-2103- (3) | புகைப்பட உபகரணங்கள்<br>குற்றப்புலனாய்வஉபகரணஙள் | 11,000,000.00 | 10,531,215.00 | 95.74 |
| 20 | 225-1-2-0-2103- (4) | வாகனங்கள் | 2,000,000.00 | 1,733,540.00 | 86.68 |
| 21 | 225-1-2-0-2103- (5) | கைவிரல் அடையாள உபகரணங்கள் | 2,000,000.00 | 1,671,700.00 | 83.59 |
| 22 | 225-1-2-0-2103- (6) | குற்றப்புலனாய்வு ஆய்வுகூடத்திற்கான உபகரணங்கள் | 700,000.00 | 682,138.00 | 97.45 |
| 23 | 225-1-2-0-2103- (7) | கலகங்களை அடக்குவதற்கான உபகரணங்கள் | 500,000.00 | | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | 225-1-2-0-2103- (8) | குதிரைகளுக்கானஉபகரணங்கள் | 13,000,000.00 | 12,895,872.00 | 99.20 |
| 25 | 225-1-2-0-2103- (9) | கனல் பிரிவுக்கான உபகரணங்கள் | 26,500,000.00 | 26,323,330.00 | 99.33 |
| 26 | 225-1-2-0-2103- (17) | ஏனைய உபகரணங்கள் | 29,500,000.00 | 28,717,065.00 | 97.35 |
| **மொத்தம் ரூபாவில்** | | | ***91,000,000.00*** | ***82,554,860.00*** | ***90.72*** |
| 27 | 225-1-2-0-2502- (1) | நாய் கொள்வனவு | 44,000,000.00 | 43,682,316.00 | 99.28 |
| 28 | 225-1-2-0-2502- (2) | குதிரை கொள்வனவு | 56,000,000.00 | 55,673,505.00 | 99.42 |
| 29 | 225-1-2-0-2502 | காலிமுகத்திடலில் சி.சி டிவி கமரா பொருத்தியமை | 8,558,168.00 | 5,108,220.00 | 59.69 |
| **மொத்தம் ரூபாவில்** | | | ***108,558,168.00*** | ***104,464,041.00*** | ***96.23*** |
| **மொத்த மூலதன செலவு** | | | ***374,558,168.00*** | ***361,662,329.00*** | ***96.56*** |
| **மொத்தக் கூட்டுத்தொகை ரூபாவில்** | | | ***1,132,303,168.00*** | ***1,055,772,520.00*** | ***93.24*** |

மூலம்: பொலிஸ் விநியோகப் பிரிவு

## *12. மொத்த நிதியியல் செயலாற்றுகை*

*2015 இல் பொலிஸ் திணைக்களத்தின் மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகளை உள்ளடங்கலாக மொத்த நிதியியல் செயலாற்றுயைகை கீழே உள்ள அட்டவணைகள் கொண்டுள்ளன.*

- ***2015 ம் ஆண்டில் வருமானம்***

*அட்டவணை இல 28*

| வருமானத் தலைப்பு | தொகை ரூபாவில் |
|---|---|
| *2001.1.0* | *78'330"637'45* |
| *2002.1.1* | *56"200"227'28* |
| *2002.2.99* | *86"286"715'23* |
| *2003.2.99* | *109"138"480'59* |
| *2003.4.0* | *321"138"480'70* |

*மூலம்: பிரதான கணக்காளர் – பொலிஸ் தலைமையகம்*

- ***அரச அலுவலர்களின் முற்பண B கணக்கு***

*அட்டவணை இல 29*

| **கணக்கின் பெயர்** | **கணக்கு இலக்கம்** | **திணைக்களத்தின் புத்தகங்களுக்கு அமைய** | | | |
|---|---|---|---|---|---|
| | | ***01.01.2015 இல் ஆரம்ப நிலுவை*** | **வருடத்தின் மொத்த வரவு** | **வருடத்தின் மொத்த செலவு** | ***31.12.2015 இல் இறுதி நிலுவை*** |
| **அரச அலுவலர்களின் முற்பண B கணக்கு** | | *Rs.* | *Rs.* | *Rs.* | *Rs.* |
| | *225011* | *2,355,021,056.96* | *1,005,077,497.22* | *1,609,108,767.42* | *1,750,989,756.76* |
| | *225012* | | *34,601,445.98* | *25,880,651.43* | *8,720,794.55* |
| | | *2,355,021,056.96* | *1,039,678,943,.20* | *1,634,989,418.85* | *1,759,710,581.31* |
| **எல்லை** | | | **அதிகூடிய பற்று எல்லை** | **அதிகூடிய கடன் எல்லை** | **அதிகூடிய பற்று மீதி எல்லை** |
| **ரூபா** | | | *1,687,075,000.00* | *1,387,075,000.00* | *4,000,000,000.00* |

*மூலம்: பிரதான கணக்காளர் – பொலிஸ் தலைமையகம்*

- ***மீண்டெழும் மூலதனச் செலவுகள்***

*அட்டவணை இல 30*

| *நிறுவனம்* | ***2015** ற்கான திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை* | | ***31.12.2015** இல் உள்ளபடியான மொத்த செலவுகள்* | | *செயற்திறன் (%)* | |
|---|---|---|---|---|---|---|
| | *மீண்டெழும்* | *மூலதனம்* | *மீண்டெழும்* | *மூலதனம்* | *மீண்டெழும்* | *மூலதனம்* |
| *இலங்கை பொலிஸ்* | *52,329,150,000.00* | *5,539,790,000.00* | *51,343,698,854.00* | *2,280,320,360.00* | *98 %* | *52 %* |

*மூலம்: பிரதான கணக்காளர் – பொலிஸ் தலைமையகம்*

## *13. 2015 ம் ஆண்டு செயற்திறன் சுருக்கமாக*

*2014 உடன் ஒப்பிடும்போது 2015 இல் பல பிரிவுகளில் முன்னேற்றம் காணப்படுகிறது அதே நேரம் சில பிரிவுகள் முன்னைய நிலையை தொடர்ந்தும் பேணும் அதேவேளை சில பிரிவுகளில் சிறிதளவான வீழ்ச்சி காணப்படுகிறது. கடமைக்கு முதலிடம் வழங்கும் பொலிஸ் திணைக்களம் அவர்களின் அர்ப்பணிப்பு மிகு சேவை மூலம் அடைந்த முன்னேற்றங்களும் சில வீழ்ச்சிகளும் கீழே தரப்பட்டுள்ளன.*

- *பாரிய குற்றங்கள் 21.14% மால் குறைவடைந்துள்ளன. இது 10774 ஆக காணப்பட்டது.*
- *பல்வேறுபட்ட முறைப்பாடுகள் 2014 உடன் ஒப்பிடும்போது குறைவடைந்துள்ளன தீர்வு காணும் வீதம் 99.7% இல் இருந்து 99.9% ஆக அதிகரித்துள்ளது.*
- *சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் சிறிதளவு அதிகரித்த போதிலும் தீர்வுகாணும் வீதம் 28% இல் இருந்து 86% ஆக அதிகரித்துள்ளது.*
- *கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைவடைந்துள்ளதோடு தீர்வு காணும் வீதம் அதிகரித்துள்ளது.*
- *போதைபொருள் சம்பந்தமான கைதுகளின் அளவு துல்லியமாக பெறப்பட்ட தடயங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான திடீர் சோதனைகளின் காரணமாக அதிகரித்துள்ளது*
- *பொலிஸ் தொடர்பிலான பொதுமக்களது அணுகுமுறை பற்றிய ஆய்வுக்கு அமைய பொதுமக்களுக்குள் "சமூக பாதுகாப்பு". உணர்வை பொலிசாரால் பெற்றுக்கொள்ளகூடியதாக இருந்தது.*
- *சில மாகாணங்களில் பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையிலான உறவு 59% இல் இருந்து 79% ஆக அதிகரித்துள்ளதுடன் குற்றம் காரணமாக பாதிக்கப்படக்கூடிய வீதம் 30% இல் இருந்து 5% ஆக குறைவடைந்துள்ளது.*
- *வீதிப் பாதுகாப்பு, வாகனக் கட்டுப்பாடு தொடர்பில் பெருமளவு மனித வளம், பௌதீக வளம் என்பனவற்றை பயன்படுத்தி பொலிசார் பாரிய முயற்சியை மேற்கொண்ட போதிலும் அதிகரித்த வீதி விபத்துக்களின் எண்ணிக்கை பின்னடைவாகவே காணப்படுகிறது. வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும் பயணிகள்,சாரதிகளின் அலட்சியம் என்பன இதற்கான காரணங்களாக இனங்காணப்பட்டுள்ளன.*